<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 195/2007</u>

பெயர் : உதயகுமார்
சாட்சி – பி.வா.சா–2 நாள்: 19.07.2025

---

**<u>குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)</u>**

1. நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரத்தினை தட்டச்சு செய்து வைத்திருந்தார்கள் அதன் பின்னர் தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல நான் செல்லும்போது தட்டச்சு செய்து கொண்டிருந்தார்கள். யார் தட்டச்சு செய்து கொண்டிருந்தார்கள் என்றால் கருணாகரன் தான் தட்டச்சு செய்து கொண்டிருந்தார். யார் என்னை சாட்சி கையெழுத்து போட அழைத்தார்கள் என்றால் 4ம் பிரதிவாதி சுப்பிரமணியம் அழைத்தார். வேறு யாரும் என்னை சாட்சி கையெழுத்து போடுவதற்காக அழைத்தார்களா என்றால் இல்லை.

2. சுப்ரமணியத்தை தவிர அங்கிருந்தவர்கள் யாரையும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தட்டச்சு செய்த முத்திரைத்தாள்களை எங்கிருந்து யார் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தட்டச்சு செய்த பத்திரத்தை படித்துப் பார்க்கவில்லை. அந்த பத்திரத்தை மொத்தம் எத்தனை பேர் எழுதிக் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த சொத்து யாருக்கு பாத்தியம், எந்த வகையில் பாத்தியமானது என்ற விவரம் எனக்கு தெரியாது.

3. நான் கையெழுத்து போட்ட பத்திரத்தில் யார் யாருடைய புகைப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்கு வைத்து தட்டச்சு செய்தார்கள் என்றால் முத்து பழனியப்பன் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. நான் செல்லும்போது ஆவண எழுத்தர் முத்து பழனியப்பன் அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு இருந்தது எழுதிக் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4. அந்த பத்திரத்தில் என்னென்ன காலை எண்கள், எவ்வளவு விஸ்தீரணம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தன என்ற விவரம் எனக்கு தெரியாது. பத்திரத்துடன்

என்னென்ன ஆவணங்கள் இணைக்கப்பட்டு இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. பத்திரத்தில் யார் யார் எத்தனை கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆவணத்தை தயார் செய்தவர் ஆவணம் தயாரித்தவர் என்று கையெழுத்து போட்டு முத்திரை வைக்கப்பட்டதா என்றால் வைக்கப்பட்டது.

5. முத்து பழனியப்பன் கையெழுத்து போட்டு முத்திரை வைத்தாரா என்றால் கருணாகரன் தான் முத்திரை வைத்து கையெழுத்து போட்டார். நான் கையெழுத்து போட்டவுடன் அங்கிருந்து கிளம்பி விட்டேன் என்றால் சுப்ரமணியம் மற்றவர்களுக்கு பணம் கொடுத்தார் அதன் பின்னர் நான் கிளம்பி விட்டேன். சுப்ரமணியம் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை என்றும், நான் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட பத்திரம் எழுதிய தேதியில் வேறு ஏதேனும் பத்திரம் எழுதினார்களா என்றால் எனக்கு தெரியாது.

6. எனக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் என்ன நடைபெற்றது என்ற விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் அங்கு போகவில்லை. நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரத்தில் அடித்தல் திருத்தல் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. நான் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் தேதியில் சங்கர் என்பவருக்கு வாதிகள் மாறாத்தாள், ராஜலட்சுமி, அங்கம்மாள், 1ம் பிரதிவாதி கருணாகரன், 4ம் பிரதிவாதி சுப்ரமணியம் ஆகியோர் வேறு சொத்துக்கள் பொறுத்து கிரயம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. 4ம் பிரதிவாதி சுப்பிரமணியம் என்பவர் 1ம் பிரதிவாதி கருணாகரன் மற்றும் வாதிகளிடமிருந்து கிரைய பத்திரத்தில் கையெழுத்து வாங்குவதாக சொல்லி நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் விடுதலை பத்திரத்தில் திரித்துகூறி மோசடியாக கையெழுத்து மற்றும் கைரேகைகள் வாங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் விடுதலை பத்திரம் மோசடியாக திரித்துக்கூறி வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியிடம் இருந்து வாங்கப்பட்டதால் தான் அனைவரது புகைப்படமும் ஒட்டப்படாமல் ஒரே ஒரு புகைப்படம் மட்டும் ஒட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

8. கருணாகரனுக்கு பத்திரங்கள் எதுவும் தயார் செய்ய தெரியாது என்றும், சுப்ரமணியம் எனது உதவியுடன் மேற்படி மோசடியாக தயார் செய்து கருணாகரன் தயார்

செய்தது போல் பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சுப்ரமணியம் எங்கு வசித்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு அலுவலகத்திற்கு அவர் வரும்போது பழக்கம். சுப்ரமணியம் என்ன தொழில் செய்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. சாரதி என்பவரை எனக்குத் தெரியாது அவர் எங்கிருந்து வருகிறார் என்ற விபரம் எதுவும் எனக்கு தெரியாது. கையெழுத்து போடும்போது பார்த்தேன். நான் கையெழுத்து போடுவதற்கு முன்பு வாதிகள் மூவரும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து போடும்போது தான் தெரியும். கருணாகரனையும் அதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து போடும்போது தான் தெரியும். நான் கையெழுத்து போடும்போது மதியம் சுமார் 2.30 மணி இருக்கும்.

10. நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் பத்திரத்தை அதற்கு பின்னர் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வாதிகள் மற்றும் கருணாகரனுக்கு, எந்த விவரமும் தெரியாது என்றும் அவர்களிடம் கிரைய பத்திரத்தில் கையெழுத்து வாங்குவதாக சொல்லி நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் விடுதலை பத்திரத்திலும் சேர்த்து கையெழுத்து வாங்கியுள்ளார்கள் என்றும், 4ம் பிரதிவாதி சுப்பிரமணியம் செய்த மோசடிக்கு நானும் உறுதுணையாக இருந்து அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

11. நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் பத்திரத்தை வாதிகளுக்கோ 1ம் பிரதிவாதிகளுக்கோ படித்து காண்பிக்காமல், அவர்களுக்கு தெரியாமல் அவர்களுக்கு சம்மதம் இல்லாமல், கையெழுத்து வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சத்தமாக படித்து காண்பித்தார்கள். அதன் பின்னர் தான் அவர்களிடம் கைரேகையும், கையெழுத்தும் வாங்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னார் சரியல்ல. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் 4ம் பிரதிவாதிக்கு எந்த விடுதலை பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சுப்ரமணியம் வாதிகளுக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும், நான் அவ்வாறு தொகை கொடுத்ததை பார்த்ததாக சொல்வது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணை சாட்சியத்தில்

சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும் எனவே எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.07.19 18:14:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.